பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 06 2024 **FRIDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷ்வாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, வலுவானதாகவும், நிலையானதாகவும் இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பிரதமரின் பதவியேற்பு விழாவில் பன்னாட்டு தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.
- ரஷ்யாவில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த இந்திய மாணவர்களின் உடல்களை தாயகம் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- தென்னாப்பிரிக்காவில் கூட்டணி அரசு அமைக்க வருமாறு அரசியல் கட்சிகளுக்கு அந்நாட்டு அதிபர் சிறில் ராமபோஸா அழைப்பு விடுத்துள்ளார்.
- ஆசிய பாரா சைக்கிளிங் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, வலுவானதாகவும், நிலையானதாகவும் இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரிய பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பதவியேற்பு விழா நாளை மறுநாள் மாலை நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளாக மக்களின் நலனுக்காக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆற்றிய பணி தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமது ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு துறையிலும் மாற்றம் கொண்டவரப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

25 கோடி மக்கள் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டது, ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமை அளிக்கக்கூடியது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக புதுதில்லியில் இன்று காலை நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், நாடாளுமன்ற குழுத் தலைவராக திரு. நரேந்திர மோடி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. நரேந்திர மோடியின் பெயரை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் முன்மொழிந்தார். இதனை மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, பிஜேபி தலைவர் திரு. ஜெபி. நட்டா ஆகியோர் வழிமொழிந்தனர்.

இதில் பேசிய மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, நாளை மறுநாள் மாலை 6 மணிக்கு பதவியேற்பு விழா நடைபெறும் என்று தெரிவித்தார்.

திரு. நரேந்திர மோடிக்கும், அமைச்சர்களுக்கும் குடியரசுத் தலைவர்த திருமதி. திரௌபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைக்கவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் திரு. சந்திரபாபு நாயுடு, திரு. நிதிஷ்குமார், திரு. ஏக்நாத் ஷிண்டே, திரு. சிராக் பாஸ்வான் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பேசிய திரு. சந்திரபாபு நாயுடு, கடந்த பத்தாண்டுகளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டின் வளர்ச்சிக்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக பாராட்டு தெரிவித்தார்.

இதேபோல், திரு. நிதிஷ்குமாரும், நாட்டின் வளர்ச்சியை பாராட்டியதுடன், எதிர்வரும் காலத்தில் பிரதமரின் வளர்ச்சிப் பணிகள் தொடரும் என்றும் அதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசு பதவியேற்பு விழாவில் இலங்கை, நேபாளம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் பங்கேற்கவுள்ளனர்.

>>>>>><<<<<<

தேசிய ஜனநாயக கூட்டணி, நாடாளுமன்றக் குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் பிஜேபி மூத்த தலைவர்கள் திரு. எல்.கே. அத்வானி, திரு. முரளி மனோகர் ஜோஷி ஆகியோரை அவர்களது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இதன்பின்னர், முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்தையும் பிரதமர் சந்தித்தார்.

>>>>>><<<<<<

பிஜேபி நாடாளுமன்ற கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு. நரேந்திர மோடிக்கு, சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா ஆதரவு தெரிவித்துள்ளது.

**Mintokgang**-ல் உள்ள தமது இல்லத்தில் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்த முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டதாக சிக்கிம் முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங் தெரிவித்துள்ளார்.

சிக்கிம் மாநிலத்தில் புதிய அரசு பதவியேற்பு விழா வரும் 10ஆம் தேதி **Paljor** மைதானத்தில் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

>>>>>><<<<<<

ரஷ்யாவில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த இந்திய மாணவர்களின் உடல்களை தாயகம் கொண்டு வர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் **Veliky Novgorod**–ல் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் பயின்ற இந்திய மாணவர்கள் நான்கு பேர், அங்குள்ள **Volkhov** ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர்.

மற்றொரு மாணவர் மீட்கப்பட்டு, அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், **Saint Petersburg**-ல் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு, மாணவர்களின் உடல்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்ட்ர மாநிலத்தைச் சேர்ந்த அந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு வெளியுறவு அமைச்சகம் சார்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இளநிலை மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கான நீட் நுழைவுத்தேர்வு முறைகேடு புகார்கள் குறித்து உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

சமீபத்திய நீட் தேர்வு முடிவுகள் தொடர்பாக வெளிவரும் செய்திகள், அந்த தேர்வுக்கு எதிரான திமுகவின் கொள்கை நியாயமானது என்பதை உறுதிப்படுத்துவதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின், சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக மற்றும் பாமக கட்சிகளும் இப்பிரச்சினையை சுட்டிக்காட்டி, நீர் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர்.

>>>>>><<<<<<

கர்நாடக மாநில சட்டப்பேரவை தேர்தலின்போது, முந்தைய பிஜேபி அரசு குறித்து கருத்து தெரிவித்ததற்காக தொடரப்பட்ட வழக்கில், காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்திக்கு, பெங்களூரு நீதிமன்றம் நிபந்தனை ஜாமின் வழங்கியுள்ளது.

பிஜேபியைச் சேர்ந்த திரு. கேசவ பிரசாத் என்பவர், திரு. ராகுல்காந்திக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்தார்.

இதே வழக்கில் கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா, துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவக்குமார் ஆகியோருக்கும் ஜாமின் வழங்கியுள்ள நீதிமன்றம், விசாரணையை வரும் 30ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது.

>>>>>><<<<<<

18-வது மும்பை சர்வதேச திரைப்பட விழா வரும் 15ஆம் தேதி முதல் 21ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு. **Sanjay Jaju,** இந்த விழாவை ஒட்டி தில்லி, சென்னை, புனே மற்றும் கொல்கத்தாவில் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளதாக கூறினார்.

ஆஸ்கார் உள்ளிட்ட சர்வதேச விருதுகளை வென்றுள்ள திரைப்படங்கள் உட்பட 59 நாடுகளின் 314 திரைப்படங்கள் இந்த விழாவில் திரையிடப்படவிருப்பதாகவும் திரு. **Sanjay Jaju** குறிப்பிட்டார்.

**>>>>>><<<<<<**

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்று முடிந்த தேர்தலில், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெறாத நிலையில், அங்கு தேசிய அளவில் கூட்டணி அரசை அமைக்க அந்நாட்டு அதிபர் **Cyril Ramaphosa** அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய அளவில் ஒற்றுமையை கருத்தில் கொண்டும், வாக்காளர்களின் நலன் கருதியும், கூட்டணி அரசு அமைக்க முன்வருமாறு அரசியல் கட்சிகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் தேதி நடைபெற்ற அதிபர் தேர்தலில் நெல்சன் மண்டேலா உருவாக்கிய ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி மொத்தம் உள்ள 400 இடங்களில் 159 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத வகையில் முதல்முறையாக அறுதிப் பெரும்பான்மையை அக்கட்சி பெறவில்லை.

இதையடுத்து தேர்தலில் வெற்றிபெற்றுள்ள மற்ற கட்சிகளுடன் இணைந்து, புதிய அரசை அமைக்க **Cyril Ramaphosa** முடிவு செய்துள்ளார்.

**>>>>>><<<<<<**

மணிப்பூர் மாநிலத்தின் எல்லைப்பகுதி நகரமான **Jiribam** நகரில் வன்முறை ஏற்பட்டதை தொடர்ந்து, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு அங்கு சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டதாகவும் விவசாயப் பணிக்கு சென்ற ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, அப்பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**>>>>>><<<<<<**

நாட்டின் கிழக்குப் பகுதி மாநிலங்களிலும், ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசத்திலும் அடுத்த நான்கு நாட்களுக்கு வெப்ப அலை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு நாட்களுக்கு, அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே, மகாராஷ்ட்ரா மற்றும் வடக்கு உள் கர்நாடக பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

ஆசிய பாரா சைக்கிளிங் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் **Almaty-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் **Jyoti Gaderiya** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் பிரிவுகளில் **Arshad Shaik, Prashant Arkal** ஆகியோர் வெள்ளிப்பதக்கத்தையும், **Yogesh Ahire** வெண்கலப்பதக்கத்தையும் வென்றுள்ளார்.

**>>>>>><<<<<<**

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவின் **Sift Kaur Samra** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் **Munich-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்று, பதக்கப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

**>>>>>><<<<<<**

ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவின் **Suwom**–ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் மற்றும் கலப்புக் குழு பிரிவுகளில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

மற்றொரு ஆடவர் குழுப் பிரிவிலும் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

**>>>>>><<<<<<**

ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Anshu Malik** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் சீனாவின் **Zhang Qi-**யை வென்றார்.

53 கிலோ எடைப்பிரிவில் **Antim Panghal-**லும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளார்.

**>>>>>><<<<<<**

உலக ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் அபிமன்யூ 3 புள்ளிகளை பெற்றுள்ளார்.

**>>>>>><<<<<<**

சிங்கப்பூர் கோல்ஃப் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Karthik Singh** பட்டம் வென்றார்.

**>>>>>>END<<<<<<**